**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 02 /2020**

வாதி தரப்பு சாட்சியாக PW. 2 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கணேஷமூர்த்தி | Father Name | : | சதாசிவம் |
| Village | : | நீத்துக்கார தெரு | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 60 | Calling | : | கூலிவேலை |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

நான் முதல் விசாரணையில் வழக்கு சொத்து என்று குறிப்பிட்டுள்ள சொத்து எத்தனை சொத்துகளாக உள்ளது அதன் புல எண் என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தாயார் ருக்மணியம்மாள் என்று நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவரின் கணவர் பெயர் கந்தசாமி என்றால் சரிதான். ருக்மணியம்மாள் மற்றும் கந்தசாமி இருவரும் பூர்வீகமாக இந்த வழக்கு சொத்தில்தான் வசித்து வந்துள்ளனர் என்றால் சரிதான். கந்தசாமி இறந்துவிட்டார் தற்சமயம் ருக்மணியம்மாள் அங்கு வசித்து வருகிறார். வாதியின் கணவர் சத்தியதாஸுக்கு கண் பார்வை தெரியாது என்றால் சரிதான். சத்தியதாஸின் சொந்த ஊர் மயிலாடுதுறை என்றால் சரிதான். அவர் தற்போது அங்குதான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சத்தியதாஸை வாதிதான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான் வாதி இங்கிருந்து அங்கு சென்று பார்த்துவருகிறார். வாதி இங்கிருந்து அங்கு சென்று பார்த்துவருகிறார் என்று வழக்கிற்காக வாதி சொல்லிக் கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை வாதிதான்

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கான விபரங்களை இவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கூறி யார் அழைத்து வந்தார் என்றால் வாதிதான் அழைத்து வந்தார். அவ்விபரங்களைதான் எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. கந்தசாமி மற்றும் ருக்மணியம்மாள் ஆகியோருடன்தான் பிரதிவாதி ஐயப்பன் வசித்துவந்தார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் வாதி கட்டிடம் கட்டுவதற்கு பிரதிவாதி உதவியாக இருந்தார் என்றும் அதற்காக ஊதியம் பெற்றுக்கொண்டார் என்றும் கட்டுமாணம் முடிந்து வாதி வீட்டில் குடியேறிவிட்டார் என்றும் வழக்கு சொத்தில் வாதி மற்றும் அவரது தாயாரிடம் பிரச்சனை செய்தார் என்றும் வாதி வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் வாதிதான் வழக்கு சொத்தை 15 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றும் கூறியுள்ளது முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.10 14:46:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.